# 5 யாம் ஐவேம்

## கவிஞர் அழகசுந்தர தேசிகர்

கவிஞர் அழகசுந்தர தேசிகர் இலங்கைச் சர்வகலா சாலையில் தமிழ்ப் பேராசிரியராய் இருந்தவர். இராமன் கதை, பாண்டவர் கதை, சந்திரகாசம், மனோன்மணி நாடகம் என பல நூல்களை எழுதியுள்ளார். இங்கு குறிப்பிடப்படும் யாம் ஐவேம் என்ற பாடல் ஒரு மொழிபெயர்ப்புப் பாடலாகும். இது கவிஞர் அழகசுந்தர தேசிகரால் மொழிபெயர்க்கப்பட்டது. எட்டு வயதுடைய பிள்ளைக்கு இருக்கின்ற அறிவு பற்றிய விடயங்களை உள்ளடக்கியதே இப்பாடலாகும்.

காங்கேயன் துறையிருந்து கீரிமலை தனுக்குக்
கடற்கரையே நானடந்து போனவொரு நாளில்
ஆங்கேநல் லழகியொரு சிறுமியைச்சந் தித்தேன்;
அவள்முகத்தை மதியெனஓர் களங்கமுமங்கில்லை.

எட்டுவய துப்பேதை இருண்டகரி குழலே
எட்டாம்நாட் பிறைபோன்ற நெற்றியிலே புரள,
கட்டழகி இருபுருவம் வில்லென்ன லாமோ?
காண்டீவம் கோதண்டம் என்பதுவே தகுதி.

கண்ணிரெண்டும் அமுதம்எனல் பொருந்துவதே யன்றிக்
கணையென்றும் நஞ்சென்றும் கழறவிடம் இல்லை
பெண்ணரசி பவளவிதழ் திறந்துநகை செய்யப்
பிறங்கினவால் வெண்முத்தம் பேதைமுகந் தனிலே.

தங்கச்சி, உன்பேர்சொல், அஞ்சுசதம் தருவேன்;
தாயுண்டோ தந்தையுண்டோ? சகோதரர்கள் உண்டோ?
புங்கவரே, என்பேர்தான் அஞ்சுசதம் பெறுமோ?
போம்,போம்,போம்,ஏனெனக்கு நாய்தின்னாக் காசு?

இங்கென்னை எல்லாரும் சுந்தரியென் றழைப்பார்;
என்னாய்ச்சி என்னப்பு இருக்கின்றார் வீட்டில்;
எங்களண்ணர் சம்பந்தர் கொழும்பினிற்கற் கின்றார்;
என்னக்கை சிவகாமி இறங்கூனில் உள்ளார்.

எனக்கிளையாள் கற்பகந்தான் போனபுரட்டாதி
எங்கள்நட ராசர்திருக் குஞ்சிதபா தந்தான்
தனக்கரிய பொருளென்று சார்ந்துசுகிக் கின்றாள்;
தம்பிசிதம் பரநாதன் தவழ்கின்றான் இப்போ.

நாங்கள்ஐவேம் பிள்ளைகளே, வேறுபிள்ளை இல்லை;
நங்கள் அப்பு ஆச்சிக்கு நாங்கள்ஐவேம் உள்ளேம்;
நீங்கள்உளீர் ஐவிர்மக்காள், நடராசர் அருளால்,
நீங்கள்ஐவீர் எங்களுக்குப் புலனைந்து போலே.

இப்படியே ஆச்சிஅப்பு எங்களுக்குச் சொல்வார்
நீர்கேட்ட கேள்விக்கு விடைதந்தேன்' என்றாள்.
செப்பினசுந் தரிமுகத்தை நன்குகவ னித்து,
சிறுமி, உனக் கொருமொழிநான் சொல்லஇடந்தருவாய்.

நாங்கள்ஐவேம் மக்கள் உளேம் என்றுமொழி நவின்றாய்
ஐவரிலே ஒருத்திநட ராசர்பதம் நண்ணின்
பாங்கிபின்னர் நால்வர்உளீர், ஐவர்என்றால் தவறு;
பாராய்அஞ் சினிலொன்று போனால்நா லன்றோ?

ஐயா, நீர் பேசுவது விந்தையினும் விந்தை!
அடியேன்யான் சொல்லுவதைப் பொறுமையுடன் கேளும்;
மெய்யாய்என் அண்ணனவர் கொழும்புக்குப் போனால்,
மேலுமொன்று போனதினால் மூன்றென்பீர் போலும்!

அக்கைசிவ காமிபின்னர் இறங்கூனுக் ககன்றால்
அவர்போக இருவர்உளீர், மூவரிலீர் என்பீர்!
இக்காலம் இருவர்உளேம் ஆச்சிஅப்பு வோடே,
யாழ்ப்பாணந் தனைவிட்டு மூவரவர் சென்றார்.

இவ்வாறு சுந்தரிதான் இயம்பியதைக் கேட்டேன்
எட்டுவய துப்பிள்ளைக் கிருந்தஅறி வென்னே!
ஒவ்வாது நான்சொன்ன சொல்லென்று கண்டேன்
உடனேஎன் மயக்கமெலாம் ஒழிந்துபறந்ததுவே.

**கவிஞர் அழகசுந்தர தேசிகர்.**

**அரும்பதங்கள்**

களங்கம் - கறை
பேதை - பெண்
கரிகுழல் - கரிய நிறக் கூந்தல்
கோதண்டம் - வில்
நகை - புன்னகை
இறங்கூன் - பர்மாவின் தலைநகரம்
நங்கள் - எங்கள்

## கிரகித்தல் பயிற்சி

1. கவிஞர் அழகசுந்தர தேசிகர் எழுதிய நூல்கள் எவை?
2. சிறுமியின் பெயர் யாது? அவளுக்கு எத்தனை வயது?
3. சிறுமியின் அழகு எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?
4. அஞ்சினில் ஒன்று போனால் நாலன்றோ என்ற அடியின் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது?
5. இப்பாடலில் உம்மைக் கவர்ந்த பாடலடியைக் குறிப்பிட்டு அதற்குரிய காரணத்தைத் தருக.

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடு

1. இப்பாடலை வாசித்து இதனைக் கதையாகக் கூறுக.
2. குழுக்களாக இணைந்து இப்பாடலை ஓசைநயத்துடன் வாசிக்க.
3. குறிப்பிடப்பட்ட சிறுமியின் அழகு சித்திரிக்கப்பட்டிருக்கும் முறையைக் கலந்துரையாடுக.
4. இதனை இருவருக்கிடையிலான உரையாடலாக எழுதி நடித்துக் காட்டுக.
5. இதுபோன்ற பாடல்களைச் சேகரியுங்கள்.

# ஒத்தகருத்துச் சொற்கள்

பின்வரும் வாக்கியங்களை வாசியுங்கள்:

★ நாம் வையகம் போற்ற வாழ வேண்டும்.
★ காலையும் மாலையும் கடவுளை வணங்குவோம்.
★ நாம் நினைப்பவற்றை மனதில் உயர்ந்தவையாக நினைக்க வேண்டும்.

இங்கு வையகம், கடவுள், மனம் ஆகிய சொற்களுக்கு அதே பொருளைத் தரும் வேறு சொற்களைப் பயன்படுத்தியும் அவ் வாக்கியங்களை எழுத முடியும். அதாவது,

வையம்- உலகம்
கடவுள் - இறைவன்
மனம் - உள்ளம்

இவ்வாறு பயன்படுத்தும் சொற்களை ஒத்தகருத்துச் சொற்கள் என்போம். அதாவது, ஒரே பொருளைத் தரும் ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் ஒத்தகருத்துச் சொற்கள் எனப்படும்.

**உதாரணம்:** அழகு - எழில்
மலை - குன்று
கரை - ஓரம்
முகம் -வதனம்
குழல் - கூந்தல்
கண் - விழி
வில் - அம்பு
பெண் - மங்கை
நகை - சிரிப்பு
சகோதரன் - ஒரு வயிற்றில் பிறந்தவன் (உடன்பிறப்பு)

**பயிற்சி**

1. யாம் ஐவேம் என்ற பாடத்திலிருந்து ஆசிரியரால் தரப்படும் சொற்களுக்கு அகராதியின் துணையுடன் ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக.

2. கீழே தரப்படும் சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக.

| | |
|---|---|
| ★ காடு | ★ நகை |
| ★ வான் | ★ பழமை |
| ★ ஆசாரம் | ★ சிரமம் |
| ★ கண்ணி | ★ யாத்திரை |
| ★ நன்கொடை | ★ அவனி |

## எதிர்க்கருத்துச் சொற்கள்

பின்வரும் வாக்கியங்களைக் கவனியுங்கள்.

★ மாணவர்கள் உற்சாகத்துடன் பாடசாலைக்கு வந்தனர்.
★ சூரியன் கிழக்கு வானில் உதித்தான்.
★ பரீட்சையில் வெற்றி பெறுவதே நோக்கம்.

இங்கு உற்சாகம், உதித்தான், வெற்றி ஆகிய சொற்களுக்கு எதிரான கருத்தைத் தரும் சொற்களும் உள்ளன.

உற்சாகம் - சோர்வு
உதித்தான் - மறைந்தான்
வெற்றி - தோல்வி

அந்தவகையில் ஒரு சொல்லுக்கு எதிரான கருத்தைத் தரும் சொற்கள் எதிர்க்கருத்துச் சொற்கள் எனப்படும்.

| | | |
|---|---|---|
| **உதாரணம்:** | அகம் | - புறம் |
| | பிறப்பு | - இறப்பு |
| | உருவம் | - அருவம் |
| | ஐது | - செறிவு |
| | கேடு | - ஆக்கம் |
| | சுலபம் | - கடினம் |
| | சுத்தம் | - அசுத்தம் |
| | மரியாதை | - அவமரியாதை |
| | உள்ளே | - வெளியே |
| | கோபம் | - சாந்தம் |

**பயிற்சி**

1. யாம் ஐவேம் என்ற பாடத்திலிருந்து சில சொற்களைத் தெரிவு செய்யுங்கள். அச்சொற்களுக்கான எதிர்க்கருத்துச் சொற்களை ஆசிரியரின் உதவியுடன் எழுதுக.

2. கீழே தரப்படும் சொற்களுக்கான எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக.

| | |
|---|---|
| ★ அகங்கை | ★ ஒற்றுமை |
| ★ இயற்கை | ★ பண்டிதர் |
| ★ ஆண்டான் | ★ அண்மை |
| ★ உண்மை | ★ ஈதல் |
| ★ பாலர் | ★ இரகசியம் |